உ

சிவமயம்

# கந்தசஷ்டி விரதச் சிறப்பு



வெளியீடு:-

அருள்மிகு
அகிலாண்டேஸ்வரி சமேத
அகிலாண்டேஸ்சுரர் திருக்கோயில்
கோவிற்குளம், வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கந்தசஷ்டி விரதச் சிறப்பு



**வெளியீடு:~**

விலை *20* /=

அருள்மிகு
அகிலாண்டேஸ்வரி சமேத
அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில்
கோவிற்குளம், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

**காப்பு-நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம். துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன் அருள் கந்தர்
சஸ்டி கவசந்தனை.

*குறள் வெண்பா*

*அமரர் இடர் தீர அமரம் புரிந்த*
*குமரன் அடி நெஞ்சே குறி*

*நூல்*

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வுரக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக்
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சீக்கிரம் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறனெ
வசுர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயிரம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் செவ்வும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலியின் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷ ணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திரிவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
எனடதலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெற காக்க
பிடறிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் யாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகபல பேய்களும்
தட்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்(து) ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவைகளுடனே பலகல சத்துடன்
தரையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள்எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டு ணங்கம் கதறிடக் கட்டு
கட்டு உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியவப் போத்தொடு நாயும்
எலியும் கரடியும் இனித்தொடா தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலையம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் காக்க
பழனிப் பதிவேல் பாலகுமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் என்தாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகளைப்
பாடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடையான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைகுரு வாழ்க
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப(து) உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற ளாமே
பிள்ளையென்(று) அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்(று) அடியார் தழைத்தி அருள்செய்
கந்தர் கஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியோ ஜபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சு மிகளில்
வீரலட்சு மிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்(கு) உவந்(து) அமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்குமு
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி விரதச் சிறப்பு

முழு உலகமும் உய்யும் பொருட்டுத் திரவவதாரம் செய்த கந்தப் பெருமானின் விரதங்கள் வார விரதம், நட்சத்திர விரதம், திதி விரதம் என மூவகைப்படும்.

இவற்றில் வாரவிரதமானது ஒவ்வொரு சுக்கிர வாரமும் பெருமானனை நினைத்து அனுஷ்டிக்கப்படுவதாகும்.

கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் ஆரம்பித்து ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்திரத்தில் கந்தபெருமானை நினைத்து அனுஷ்டிக்கப்படும். விரதம் நட்சத்திர விரதம் எனப்படும். மேலே சொல்லப்பட்ட இரண்டு வகையான விரதங்களும் தவிர அவற்றுக்கு மேலானதும் சிறப்பானதுமான முருகப்பெருமானின் விரதம் திதிவிரதமான கந்தசஷ்டி விரதமாகும். இந்த விரதமானது ஐப்பசி மாதத்தில் தீபாவளியை அடுத்து வருகின்ற அமாவாசைத் திதியை அடுத்து வருகின்ற பிரதமை திதியில் ஆரம்பிக்ப்பட்டு ஷஷ்டித்திதி ஈறாகவுள்ள ஆறு நாட்கள் அனுஷ்டிக்கப்படுவதாகும்.

கந்த சஷ்டி விரதமானது இம்மையில் நாம் விரும்பும் சகல செல்வங்களையும் சுகபோகங்களையும் தரவல்லதோடு புத்திரலாபத்துக்குரிய சிறப்பான விரதமுமாகும். இவ்விரதத்தை முறையாக அனுட்டிப்போர் இம்மையில் மேலே கூறப்பட்ட சகல பாக்கியங்களையும் பெறுவதோடு மறுமையில் பேரின்ப பெருவாழ்வு பெற்று முருகனடியில் நிரந்தர இன்பம் எய்துவது திண்ணம்.

இவ்விரதத்தின் சிறப்பு முசுகுந்த சக்கரவர்த்தியின் சரிதைமூலம் கந்த புராணத்தில் மிகத்தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. தனது அரசு செல்வங்கள் அனைத்தையும் இழந்த முசுகுந்த சக்கரவர்த்தி இந்த விரதத்தை முறைப்படி அனுஷ்டித்ததன் பயனாகத்தான் இழந்த அரசு மற்றும் செல்வங்கள் அனைத்தையும் மீளப்பெற்று இம்மையில் இன்புற்று வாழ்ந்து இறுதியில் தனது சுற்றத்தாரோடு முருகனடியில் பேரின்ப பெருவாழ்வு பெற்றார் எனக் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பல அரசர்கள், முனிவர்கள், தேவர்கள் ஆகியோர் இவ்விரதத்தின் பயனாக பெரும் பேறுகள் பெற்றமை புராணங்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது.

கந்த சஷ்டி ஆறு நாட்களும் முருகப் பெருமான் சூரபன்மன் முதலாய அசுரர்களை அழித்தொழித்ததன் மூலம் இந்த உலகத்திலே அதர்மத்தையும் அக்கிரமங்களையும் அழித்தொழித்து தர்மத்தை நிலைபெறச் செய்தார். ஆறுநாட் போரும் ஆறு பகைகளை வெற்றி பெறுதலைக் குறிக்கும். முப்பொருளின் உண்மையை விளக்குதலே ஷஷ்டி விரதத்தின் குறிக்கோளாகும். மேலும் ஆன்மாக்கள் தம்மை துன்பத்துள் வீழ்த்தும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறு பகைகளையும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் வெற்றி கொண்டு இறைவனடியில் இணைந்து பேரின்பப் பெருவாழ்வு பெறுவதற்கும் கந்த ஷஷ்டி விரதமே மேலானதும் உகந்ததுமாகும்.

எனவே இந்த விரத நாட்களில் முருகப்பெருமானிடம் சரணடைந்து பிரார்த்தனையில் ஈடுபட்டு நாமும் நமது மக்களும் அனுபவித்துக் கொண்டிருக்கும் துன்பங்கள், துயரங்களெல்லாம் நீங்கப்பெற்று இன்பமாய் வாழ்ந்து மறுமையிலும் பேரின்பப் பெருவாழ்வு பெற்றுய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணத்தின் சாரம்

(திருமுருக கிருபானந்த வாரியாரின் சொற்பொழிவுச் சுருக்கம்)

பாவங்களிலெல்லாம் மிகப்பெரிய பாவம் நன்றி கொல்வது. கொலை, புலை, களவு முதலான பாவங்களுக்கெல்லாம் பரிகாரம் உண்டு. ஆனால் நன்றி கொன்ற பாவத்திற்கு பிராயச்சித்தம் கிடையாது. நாம் எந்தப் பாவத்தைச் செய்தாலும் தெய்வம் மன்னிக்கும். நன்றி கொன்ற பாவத்தை தெய்வம் மன்னிக்காது. செய்த நன்றியை மறந்து விடுவது ஒன்று. நன்றி கொல்வது ஒன்று. நன்றி மறந்தால் பாவம். நன்றி கொல்வதுதான் மிகப்பெரிய பாவம். அதாவது உதவி செய்தவனுக்கு மேற்கொண்டு கெடுதல் பண்ணுவது நன்றி கொல்லல்.

நன்றி கொன்றவன் நிச்சயமாக உய்வு பெறமாட்டான் என்ற ஒரே தர்மத்தை வலியுறுத்துவது கந்தபுராணம்.

சூரபத்மனுக்கு 1008 அண்டங்களை ஆளும் உரிமையையும் 108 யுகங்கள் வாழும் ஆயுளையும் வஜ்ஜிரயாக்யையும், இந்திரலோகத் தேரையும் அள்ளி அள்ளி வழங்கியவர் சிவபெருமான்.

அவரது திருக்குமாரர் முருகப்பெருமான் வந்தவுடனே சூரபத்மன் அவரை வணங்கி "சிவபெருமானே! உமது தந்தையார் கொடுத்தவரம் எனக்குப் பெருவிழா தந்தது. தேவரீர் தந்தையாலே நான் வாழ்கிறேன்". என்று நன்றி சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அவன் அவ்விதம் செய்யாமல் சிவகுமாரனை அழிக்க முயன்றான்.

ஆகவே சூரபத்மனை முருகனின் வேலாயும் அழிக்கவில்லை. அவன் கொன்ற நன்றி அவனை அழித்து விட்டது.

ஆகவே எல்லோரும் நன்றி மறக்கக்கூடாது. நன்றி பாராட்ட வேண்டும். இதுதான் கந்தபுராணத்தினுடைய சாரம்.

சூரபத்மன் பரதார கமனம்(பிறன்மனை நயத்தல்) செய்தான். பொய் சொல்லவும், கொடுமைகள் செய்யவும் தன் தாயாகிய மாயையினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேசிக்கப்பட்டான். இவற்றையெல்லாம் செய்யவும் செய்தான். இவை எல்லாவற்றிற்கும் மேலாகச் செய்நன்றி கொன்றான். அதனாலேயே குலத்தோடு அழிந்து விட்டான்.

காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவர் கச்சியப்பர். அவர் கந்தபுரானத்தை தமிழிலே மொழிபெயர்த்து அருளினார். அவரது கனவிலே முருகப் பெருமான் காட்சி கொடுத்து 'திகட சக்கரச் செய்முகம் ஐந்துளான்' என்று அடியெடுத்துக் கொடுத்தார்.

ஆண்டவன் கொடுத்த அந்த முதல் வார்த்தையை வைத்துக்கொண்டு பாடப்பெற்ற நூல் கந்தபுராணம்.

கச்சியப்ப சிவாச்சாரியார் ஒவ்வொரு நாளும் 200பாடல், 300பாடல் எழுதி அவற்றைக் காஞ்சியில் குமரக்கோட்டம் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானுடைய திருவடியிலே வைத்துவிட்டுப்போவார்.

மறுநாள் காலையில் அவர் வந்து பார்த்தால் அதிலே முருகன் செய்த திருத்தங்கள் இருக்கும். அவ்விதம் முருகவேளே திருத்திக் கொடுத்தநூல் கந்தபுராணம்.

உலகம் தோன்றிய நாள் தொட்டு தாய்மார்கள்தான் குழந்தைகளைப் பெறுவார்கள். அப்பா பேர் வைப்பார். இதற்கு மாறாக முருகன் திருவவதாரத்தின்போது நிகழ்ந்தது. இங்கே அப்பா குழந்தை பெற்று, அம்மா பேர் வைக்கிறாள்.

உலகத்திலே எங்குமே ஆண்களுக்கு மகப்பேறு மருத்துவ விடுதி கிடையாது. ஓர் ஆண்பிள்ளை குழந்தை பெற்றான் என்று சரித்திரம் கிடையாது.

கயிலாயத்தில்தான் சிவபெருமான் தமது நெற்றிக் கண்ணிலிருந்து முருகப்பெருமானை உண்டாக்கினார். எனவே ஆண்பிள்ளை முருகன் ஒருவர்தான். நாமெல்லாம் பெண்பிள்ளைகள். பெண் வயிற்றிலிருந்து பிறந்தால் பெண்பிள்ளைகள்தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர் எல்லோரும் பரமேஸ்வரனிடம் சென்று "ஆண்டவனே! சூரபத்மன் ஆட்சியின் கொடுமை எங்களால் தாங்க முடியவில்லை. நாங்கள் தவம் செய்ய முடியவில்லை. எங்களையெல்லாம் அவன் துன்புறுத்துகின்றான். அனேக தேவர்களையும் தேவ மாதர்களையும் அந்த அரக்கன் சிறையில் அடைத்துவிட்டான் சுவாமி!" என்று முறையிட்டார்கள்.

இந்திரனுக்கு ஒரே ஒரு மகன். அவன் பெயர் ஜயந்தன். அந்த ஒரே மகனை ஜெயிலில் போட்டி அடைத்து அடைத்து வேதனைப்படுத்துகின்றான் சூரபபத்மன். நாம் ஜெயிலில் இருந்தால் அப்பா, அம்மாவுக்கு வேதனை.

ஆகவே இந்திரனும் இந்திராணியும், "சுவாமி சூரபத்மனுடைய ஆட்சியின் கொடுமை எங்களாலே தாங்க முடியவில்லை. எங்களைக் காப்பாற்றுங்கள்" என்ற சிவபிரானிடம் வேண்டினர்.

"ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவமும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி
வேதமும் கடந்து நின்ற விமல, ஓர் குமரன் தன்னை
நீர்தரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க"

என்றார்.

-கந்தபுராணம்

'நீர் தர வேண்டும், "ஆண்டவனே சூரபத்மனைக் கொல்லத்தக்க குழந்தையை நீரே எமக்குத் தரவேண்டும். அது தங்களிடமத்திலிருந்து வரவேண்டும். அந்தக் குழந்தை நின்னையே நிகர்க்க விளங்க வேண்டும்" என்று கூறி தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள்.

சிவனுக்குச் சமானம் கிடையாது.

இதைத்தான் 'சமான ரஹிதம் விபும்' என்று வேதம் சொல்லுகிறது. 'தனக்குவமையில்லாதான்' என்று திருவள்ளுவரும் குறிப்பிட்டார்.

சமானம் இல்லாத ஆண்டவனைப் பார்த்து, 'உனக்குச் சமானமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையைக் கொடு" என்றால், என்ன பொருள்? "நீயே குழந்தையாக வா!" என்று சொல்லமாட்டார்கள். "ராத்திரி சாப்பாட்டுக்கு நெய் வேணும்" என்பார்கள். நெய் வேணும் என்பதற்குப் பொருள் வேறு; வாங்கி வா என்பதற்கு பொருள் வேறு. முன்னதில் அன்பு, பின்னதில் அதிகாரம்.

தேவர்கள் ஆண்டவனைப் பார்த்து, "சுவாமி! நீயே குழந்தையாக வா!" என்று சொன்னால் உத்தரவு போட்ட மாதிரி இருக்கும். அப்படிச் சொல்லக்கூடாது. "உனக்குச் சமானமான குழந்தையைக் கொடு" என்றால், "தேவரீரே குழந்தையாக வரவேண்டும்" என்று அர்த்தம்.

"வந்திக்கும்
மலரோன்
ஆதி வானவர்
உரைத்தல் கேளாய்
புந்திக்குள்
இடர்செய்யற்க
புதல்வனைத்
தருதும் என்னா"?.

-கந்தபுராணம்

தேவர்களிடம் சிவபெருமான், துன்பத்தை விட்டுவிடுங்கள். இப்பொழுதே குமரனைத் தருகின்றேன்" என்றார்.

சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள், அவை முறையே ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் எனப்படும். ஆறாவதாகிய மேல்நோக்கிய திருமுகம் அதோமுகம். அது ஞானிகளுக்கு மட்டுமே தெரியும். அதாவது ஞானிகள் தங்கள் தவத்தினால் அறிந்துகொள்வது அதோமுகம்.

சிவபெருமானுடைய அந்த ஆறு திருமுகங்களிலும் நெற்றியிலே ஒரு கண் இருக்கும். அது ஞானக்கண். அது மேல்நோக்கி இருக்கும் அவ்விதம் மேல்நோக்கிய கண்ணை உடையவன் என்பதனால்தான் சிவபெருமானுக்கு விரூபாக்ஷன் என்ற ஒரு பெயரும் ஏற்பட்டது.

சிவனார் தமது ஆறு நெற்றிக்கண்ணைத் திறந்தார். உடனே அவற்றிலிருந்து ஆறு அருட்பெரும் ஜோதிகள் வெளிப்பட்டன. அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்மை தாங்க மாட்டாமல் தேவர்களெல்லாம் திசைக்கு ஒருவராக, மூலைக்கு ஒருவராக ஓடிப்போய் ஒளிந்தார்கள்.

சிவன் தமது திருமுகத்திலிருந்து வெளிப்பட்ட அருட்பெரும் ஜோதியை வாயுதெவனிடம் கொடுத்தார். தாங்கமுடியாத அந்த ஜோதிப்பிழம்பை சிறிது தூரம் வாயுவும், சிறிது தூரம் அக்கினியும் மாறி மாறி எடுத்துச் சென்றனர். முடிவில் அக்கினி, ஆகாச கங்கையில் கொண்டு வந்துவிட்டது. ஆகாச கங்கை வெப்பம் தாங்கமாட்டாமல் வற்ற ஆரம்பித்தது. பின்னர் கங்கை வழியாக அந்த ஜோதிப்பிழம்பு நிலத்துக்கு வந்தது. அது வந்து சேர்ந்த இடம் இமயமலை அருகிலுள்ள சரவணப் பொய்கை, சரம் என்றால் தர்ப்பை, வனம் என்றால் காடு, சரவணன் என்றால் தர்ப்பைக்காடு கரையோரங்களில் தர்ப்பைப் புல் காடுபோல் வளர்ந்திருந்த இயற்கையான ஒரு நீர் நிலையாக அந்த சரவணப் பொய்கை விளங்கியது.

*தர்ப்பைக்கு மின்சாரத்தை ஈர்க்கும் ஆற்றல் உண்டு.*

சிவனின் கண்களிலிருந்து வெளிப்பட்ட அக்கினிப் பிழம்பு வானத்திலிருந்து, வாயுவிலிருந்து, அக்கினி தேவனிடம் மாறி, தண்ணீரில் இறங்கி வருகிறது.

1008 இதழ்களைக் கொண்ட தாமரைப் பூக்கள் சரவணப் பொய்கையில் மலர்ந்திருந்தன. அங்கிருந்த ஆறு தாமரை மலர்களில் ஆறு தீப்பொறிகளும் சென்று தங்கி அழகிய ஆறு குழந்தை வடிவம் பெற்றது.

இவ்விதம் சிவபெருமானின் கண்களிலிருந்து புறப்பட்ட ஆறு தீப்பொறிகளும் வானம், வாயு, அக்கினி, தண்ணீர், நிலம் என்ற பஞ்சபூதங்களின் சேர்க்கையால் அழகிய ஆறு குழந்தைகளாக ஆயிற்று.

இதனை அறிந்து சரவணப் பொய்கையின் கரையில் தேவர்களும் முனிவர்களும் கூடினார்கள்.

திருமால், நான்முகன், இந்திரன் முதலியோர் அனைவரும் அந்தக் குழந்தையைக் கண்டு ஆனந்தம் கொண்டனர்.

சப்தரிஷிகள் எனப்படும் ஏழு முனிவர்களாகிய அகஸ்தியர், ஆங்கீரசர், கௌதமர், காசிபர், புலஸ்தியர்,மார்க்கண்டேயர், வசிஷ்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அல்லது அத்திரி, ஆங்கீரசர், கௌதமர், ஜமதக்னி, பரத்வாஜர், வசிஷ்டர், விசுவாமித்திரர்) ஆகியோர் அந்தக் குழந்தையைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

வசிஷ்ட மகரிஷியின் மனைவி அருந்ததியைத் தவிர, மற்ற ஆறுரிஷிகளின் மனைவியார் ஆறுபேரும் அந்தக் குழந்தைகளைப் பாலூட்டி வளர்த்தனர்.

அந்த ரிஷிபத்தினிகள் ஆறுபேரையும் கார்த்திகைப் பெண்கள் என்று சொல்வது மரபு. அவர்கள் கிருத்திகை நட்சத்திரத்தின் அதிதேவதைகள்.

புராணம் என்றால் பழைமை என்பது பொருள். புராதனம் என்ற சொல் புராணம் என்று வந்தது.

சில பேர் புராணம் என்றால் புளுகு என்பார்கள். நரம்பில்லாத நாவிலே எதையும் சொல்வார்கள்.

திருவாசகத்திலே மாணிக்கவாசகர் முதலிலே பாடினது சிவபுராணம். அங்கே புராணம் என்றால் இறைவனுடைய பழமையைச் சொல்கிறார்கள்.

ஆகவே புராணம் என்ற சொல்லுக்குப் பழைமை என்பது பொருள்.

வியாச பகவான் 18 புராணங்களைப்பாடி அருளினார்கள். அவற்றில் சிவபுராணம்10, விஷ்ணு புராணம்4, பிரும்ம புராணம்2, அக்கினி புராணம்1, சூரிய புராணம்1, ஆக மொத்தம் புராணங்கள்18. இந்தப் புராணங்கள் எதற்காக என்ற ஒரு கேள்வி எழும்.

இந்தக் கடிகாரம் கெட்டுப்போனால் இதைப் பழுதுபார்ப்பவன் பூதக்கண்ணாடி போட்டுக்கொண்டு பார்ப்பான். நுண்ணிய சக்கரங்களைப் பார்க்கும் ஆற்றல் இந்தக் கண்களுக்கு இல்லை. ஆகவே நுண்ணியச் சக்கரங்களை விரித்துக் காட்டுவது பூதக்கண்ணாடி.

அது போல வேதங்களிலே வரும் நுண்ணிய தர்மங்களை விரித்துக் காட்டுவது புராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணம் வேண்டுமா, வேண்டாமா என்பதை இப்போது நீங்களே தீர்மானம் பண்ணிக் கொள்ளுங்கள்.

பழுது பார்க்கிறவனுக்குப் பூதக் கண்ணாடி இன்றியமையாதது போல, வேதத்திலே உள்ள நுண்ணிய தர்மங்களை நமக்கு விரித்துப் புலப்படுத்துவது புராணம். ஒன்று, இரண்டு உதாரணத்துக்குச் சொல்கிறேன்.

"சத்யம் வத" என்ற வேதம் சொல்கிறது. சத்தியத்தைப் பேசு. அந்த ஒரே ஒரு தர்மத்தை நமக்கு விரிவாக எடுத்துக் காட்டுவது ஹரிச்சந்திர புராணம். "தர்ம சர" தர்மத்தை செய் அந்த உண்மை விரிவாக எடுத்துக் காட்டுவது மகாபாரதம்.

இப்படி வேதத்தில் உள்ள நுண்ணிய தர்மங்களையெல்லாம் விரிவாக எடுத்துக் காட்டுவது புராணம். இந்த உண்மையை நன்றாக மனதிலே பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

மனிதன் செய்நன்றி மறத்தல் கூடாத என்ற உண்மையை விளக்க வந்த நூல் கந்தபுராணம்.

சிவபெருமானை அவமதித்த தட்சன் யாகம் செய்தான். அதில் கலந்து கொண்டதால் தேவர்கள் பெரும் பாவத்துக்கு ஆளானார்கள்.

அந்த பாவவினை காரணமாகவே சூரபத்மனால் தேவர்கள் கொடுந்துன்பம் அனுபவிக்க நேர்ந்தது.

சூரபத்மனின் கொடுமையைத் தெவர்களால் தாங்க முடியவில்லை. எனவே அவர்கள், "சூரபத்மனின் கொடுமையிலிருந்து எங்களை காத்தருளுங்கள்" என்று சிவபிரானிடம் பிரார்த்தித்தார்கள்.

தேவர்களை சூரபத்மனின் கொடுமையிலிருந்து விடுவிக்கும் பொருட்டு இறைவன் திருமுருகனை அவதாரம் செய்வித்தார்.

கார்த்திகைப் பெண்களால் எடுத்து வளர்க்கப்பட்டதால் முருகனுக்கு காத்த்திகேயன் என்ற பெயர் ஏற்பட்டது.

கங்கை வழியாக வந்ததால் காங்கேயன் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினியிலிருந்து தோன்றியதால் அக்கினிப்பூ என்றும், சரவணப் பொய்கையில் தோன்றியதால் சரவணபவன் என்றும், வைகாசி மாதம் விசாக நட்சத்திர தினத்தில் தோன்றியதால் விசாகன் என்றும், ஆறு குழந்தைகளும் சேர்ந்து ஒரே குழந்தையாக மாறியதனால் ஸ்கந்தன் என்றும், பேரழகுடன் விளங்கியதால் முருகன் என்றும், தேவர்களின் சேனாதிபதியாக விளங்கியதால் தேவ சேனாதி அல்லது சேனானி என்றும், சக்திவேல் உடையவனாதலால் சக்திதரன் என்றும், சேவல் கொடியை உடையவன் என்பதால் குக்குடக் கொடியோன் என்றும், ஆறு திருமுகங்களைக் கொண்டவன் என்பதால் ஷண்முகன் என்றும் சிவக்குமரன் போற்றப் பெறுகின்றான்.

பஞ்ச பூதங்களின் வழியாக முருகனின் அவதாரம் நடைபெறுகிறது. சிவபெருமானின் நெற்றியிலிருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகளும் அப்படியே வந்திருக்குமேயானால் அவற்றின் உஷ்ணத்தை ஒருவராலும் தாங்க முடியாமல் போயிருக்கும். அதனால்தான் அந்தப் பொறிகள் வாயு, அக்கினி, கங்கை, நீர், வானம், நிலம் ஆகிய பஞ்ச பூதங்களின் வழியாக வந்து, மெல்ல மெல்ல மென்மை உடையதாக மாறிப் பிறகு குழந்தையாக அவதாரம் ஆகிறது.

எப்படி மின்சாரம் அதிக சக்தி உடையதாக இருக்கும் பொழுது, அதைத் தாங்கமுடியவில்லை என்று மின்மாற்றி (Transfomer)யின் மூலமாகச் சக்தியைக் குறைத்துத் தேவைக்கேற்ப, ஆறு அருட்பெரும் ஜோதிகளும் பல நிலைகளையும் கடந்து உலகம் தாங்கும் தன்மை பெற்றதாகி மென்மைமிக்க குழந்தையாக ஆயிற்று.

மேலும், பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் அமைந்த உலகம் முழுவதற்கும் தலைவன் முருகன் என்பதற்கு அடையாளமாக, அவன் பஞ்சபூதங்களின் வழியாலும் சேர்க்கையாலும் தோன்றினான்.

முருகப்பெருமானுக்கு பதினெட்டுக் கண்கள். அநேகம் பேர் பன்னிரண்டு கண்கள்தான் என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். பதினெட்டுக் கண்கள் என்பது பலருக்குத் தெரியாது.

சிவபெருமான் சிவகுமாரன். அப்பாவைப் போலத்தானே பிள்ளையும் இருக்கும்? அப்பாவுக்கு மூன்று கண்கள் என்றால் முருகனுக்கும் மூன்று கண்கள்தானே! எனவே முருகனின் ஆறு முகத்திலே 6x3=18 பதினெட்டுக் கண்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனே முருகன். முருகனே சிவன்.சிவபெருமானுக்கு பிறப்பும் இறப்பும் கிடையாது.

"செம்மான் மகளைத் திருடும் திருடன் பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்று அருணகிரியாரின் கந்தரனுபூதி கூறுகிறது.

"கருணை கூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும், ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய" என்று எகந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு 'உதித்தனன்' என்றால் பிறந்தான் என்று அர்த்தமில்லை. சூரியன் உதித்தான் என்றால் பிறந்தான் என்றா அர்த்தம்? என்றைக்குமே உள்ள ஆதித்த பகவான் சில காலம் மறைந்திருப்பார். இப்போது வெளிப்படுகிறார். அது போலவே என்றைக்கும் உள்ள எம்பெருமான் முருகன் அப்போது சரவணப் பொய்கையில் வெளிப்பட்டுத் தோன்றினார். இதைத்தான் உபசாரமாக 'உதித்தனன்' என்று கந்தபுராணம் கூறுகிறது.

இறைவனும் இறைவியும் சரவணப் பொய்கையின் கரைக்கு எழுந்தருளினார்கள்.

இறைவி ஆறு குழந்தைகளையும் ஒன்றாக எடுத்து அணைத்தாள். அது காரணமாக ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும், ஒரே உடலும் உடைய ஸ்கந்தனாக முருகன் மாறினான்.

ரிஷப வாகனத்தில் அமர்ந்து இறைவனும் இறைவியும் குழந்தையை கயிலைக்கு எடுத்துச் சென்றார்கள்.

இறைவியின் கால்சிலம்பில் உள்ள நவமணிகளிலிருந்து நவசக்திகள் தோன்றினார்கள். நவசக்திகளிடமிருந்து நவவீரர்களும், லட்சம் வீரர்களும் தோன்றினார்ள். அவர்கள் எல்லோருடனும் முருகன் அற்புதத் திருவிளையாடல் புரிந்தான்.

இந்திரனும் திருமாலும் முருகன் யார் என்று உணராமல் அவனுடன் போர் புரிந்து தோற்றனர். பிறகு உண்மையை உணர்ந்து முருகனைப் போற்றித் துதித்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவம் கொண்ட நான்முகன் தலையில் குட்டி அவனை முருகன் சிறையிலிட்டான். பின்னர் தந்தையின் ஆணையால் நான்முகனை முருகன் விடுதலை செய்தான்.

நாரத முனிவர் ஒரு யாகம் செய்தார். அதில் பிழையான மந்திர உச்சரிப்பால் ஆட்டுக்கடா தோன்றியது. அந்த ஆட்டுக்கடாவை வீரபாகு அடக்கிக் கொண்டு வந்தபோது, அதை முருகன் வாகனமாக ஏற்று 'அஜவாகனன்' என்று பெயர் பெற்றான்.

அந்தப் பிரபு முருகன் ஞானமே உருவாகிய நாயகன். அதனால்தான் ஞானபண்டிதன் என்ற பெயரைப் பெற்றான். தந்தைக்கே அவன் பிரணவத்தை உபதேசித்ததை,"ஓரெழுத்தில் ஆ றெழுத்தை ஓதுவித்த பெருமாளே!" என்று அருணகிரிப் பெருமான் அற்புதமாக வியந்து பாடியிருக்கிறார்.

இந்தப் பிரணவத்தை சாஸ்திர ரீதியாக அப்பாவுக்கு முருகக் கடவுள் சொன்னாராம். அதனால்தான் அவருக்கு சுவாமிநாதன், சிவகுரு, குமரகுரு, பரமகுரு, குருசுவாமி, குருபரன் என்று அநேக நாமங்கள் உள்ளன.

மாயைக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் முறையே சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் என்ற மூன்று அசுரர்கள் ஆவார்.

இவர்களுள் சிங்கத்தலையுடன் பிறந்தவன் சிங்கமுகன். யானைத்தலையுடன் பிறந்தவன் தாரகன்.

இந்த மூன்று அசுரர்களையும் எம்பெருமாள் அடக்கி வைத்தார், அப்படி என்றால் என்ன பொருள்?

நம்முடைய துன்பங்களுக்கெல்லாம் காரணம் ஆணவமலம். இப்பொழுது நான் சொல்வதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணம் ஆணவ மலம்தான்.

அந்த ஆணவ மலம் ஆன்மாக்களுக்கு இடையே வந்ததல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா என்றைக்கும் உண்டோ அன்றைக்கே ஆணவமலம் உண்டு. செம்பு என்றைக்கு உண்டோ அன்றைக்கே களிம்பு உண்டு. அரிசி என்றால் தவிடு இருக்கும். செம்பு ன்றால் களிம்பு இருக்கும் நீர் என்றால் சேறு இருக்கும். குழந்தைகள் என்றால் சேட்டைகள் இருக்கும். *மனைவி என்றால் அடம் பிடிப்பாள்.*

அது போல ஆன்மாவுக்கு ஆணவ மலம் உண்டு. இந்த ஒரு மலத்தைப் போக்குவதற்குப் பகவான் இரண்டு மலங்கள் கொடுத்தார். அவை முறையே கன்ம மலம், மாயா மலம் எனப்படும். ஒரு மலத்தைப் போக்க இரு மலத்தைக் கொடுத்தார். உங்களுக்கு என்ன தோன்றும்?. ஒன்றைப் போக்க இரண்டா? காலிலே முள்தைக்குமானால் பெரிய முள்ளை எடுத்துக் குத்துவார்கள். முள்ளை முள்ளாலே போக்கவேண்டும். வைரத்தை வைரத்தாலே அறுக்க வேண்டும். துணியிலே இருக்கிற அழுக்கை உவர்மண் போட்டுத் துவைக்கிறார்கள். 'வாயை மூடு' என்ற பெரிய சத்தத்தாலே சிறிய சத்தங்களை அடக்குகிறார்கள். அதுபோல மலத்தை மலத்தாலே போக்க வேண்டும். அதாவது ஆணவ மலத்தைக் கன்ம மலம், மாயா மலங்களினாலே போக்க வேண்டும்.

எனவே எல்லாவற்றுக்கும் மூல மலம் ஆணவ மலம். அதனைப் போக்கவல்லது கன்ம மலம். அதனைக் கழிக்க வல்லது மாயாமலம். ஆகமலங்கள் மொத்தம் மூன்று சூரபத்மன் ஆணவமூலம் பல தலைகளை உடைய சிங்கமுகாசுரன் கன்ம மலம். தாரகாசுரன் மாயா மலம். நீங்கள் கேட்டு கொண்டிருப்பது கந்தபுராணத்தின் நுன்பொருள்.

தேங்காய் மேல் பச்சையாய் இருக்கிற மட்டை மாயா மலம். உரித்து எடுக்கிற நார் கன்ம மலம். இறைவன் சந்நிதானத்திலே உடைத்து எடுக்கிற ஓடு ஆணவ மலம். ஆசார்யன்தான் உடைக்கிறார். அது ஆணவமலம்.

ஆணவம் சட்டென்று போகாது. சில தாய்மார்கள் சொல்வார்கள். "ஆணவம் பிடித்து அலைகின்றான்" என்றும், "அவன் கர்மத்தை அவன் தானே தொலைக்கணும்" என்றும், மாயையிலே மூழ்கி இருக்கிறான்" என்றும் தாய்மார்கள் பேசுவது வழக்கத்தில் உள்ளது.

இந்த மூன்று மலத்தை எதனால் அழிக்க வேண்டும். ஞானத்தினால் அழிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம்தான் வேல். அறிவு என்றாலும், வேல் என்றாலும் ஞானம் என்றாலும் கருத்து ஒன்றுதான்.

அறிவு பரந்து இருக்க வேண்டும். பிறகு கூர்மையாக இருக்க வேண்டும். வேலாயுதத்தைக் கவனியுங்கள் அடிப்பகுதி ஆழமாக இருக்கிறது நுனிப்பகுதி கூர்மையாக இருக்கிறது.

அதுபோல ஞானமும் ஆழமாக இருக்கவேண்டும். அகலமாக இருக்க வேண்டும். கூர்மையாக இருக்கவேண்டும்.

வேல் என்றால் ஞானம். எல்லாவற்றையும் ஞானம் தான் வெல்லும். அப்படிப்பட்ட ஞானவேலால் குமரக் கடவுள் முதலில் மாயா மலமாயிருக்கும் தாரகனை வென்றார். பிறகு அதே ஞானவேலினால் கன்மமலமாயிருக்கின்ற சிங்கமுகாசுரனை வென்றார். ஆணவ மலம் தான் கடைசிவரைக்கும் இருக்கும். அதைச் சட்டென்று வெல்ல முடியாது. அது கடைசி மலம். சூரபத்மன் பல்வேறு வடிவங்கள் எடுத்தான். அந்த ஞானவேலினால் அத்தனை வடிவங்களையும் எம்பெருமான் அழித்து அருளினார்.

கடைசியில் அவன் ஆயிரம் கோடி அமாவாசையாக ஆனான். இருட்டு - ஆணவ இருள். ஆணவத்தின் தன்மை இருளாக இருக்கும். இந்த பூலொக இருள் எந்தப் பொருளையும் காட்டாது. தன்னையும் காட்டாது சிலபேர் திருடிவிட்டு அவனும் நம்கூட இருப்பதுபோல. அதுபோல் ஆணவமலம் அது எதையுமே காட்டாது தன்னையும் உணர விடாது, ஆணவ மலம். ஆயிரம்கோடி அமாவாசையாக அவன் வடிவெடுத்தான். 'அந்த இருள் மீது முருகன் நூறுகோடி சூரியப்பிரகாசம் பொருந்திய ஒளியாகிய வேலைச் செலுத்தினான்.' என்று குறிப்பிடுகிறார் அருணகிரிநாதர்.

சூரபத்மனை முருகப்பெருமான் ஞானவேலால் 'அழித்தார்' என்று சொல்வதும் சரியல்ல.

ஏனென்றால் முருகன் சூரனது உள்ளத்தில் இருந்த ஆணவ இருளைத்தான் அழித்தார். நரசிம்ம அவதாரம், ராம அவதாரம் போன்றவற்றில் திருமால் பகைவர்களை அடியோடு அழித்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவ்விதம் முருகன் சூரனை அடியோடு அழிக்கவில்லை. ஆணவ மலம் அடியோடு அழியாது அதை மேலே கிளம்பாமல் அழுத்தித்தான் வைக்கமுடியும். தன்னைப் பகைத்த சூரனையும் முருகன் அப்படித்தான் செய்தான். சூரன் மயிலாகவும், சேவலாகவும் மாறியபின், அவனை முருகன் தன் காலால் அழுத்தியும் கையில் பிடித்தும் அழுத்தி வைத்தான்.

சுண்டைக்காய், பாகற்காய் முதலியவை கசக்கின்றன. அதனாலேயே பலர் அவற்றை விரும்பவதில்லை, ஆதலால் அவற்றைப் பக்குவமாக வேக வைக்கிறார்கள், பலமுறை பிழிந்தெடுக்கிறார்கள், பிறகு காரம்சேர்த்து வறுக்கிறார்கள், வற்றலாக மாற்றுகிறார்கள், அப்பொழுது கசப்பு வற்றிவிடுகிறது. அதுவரையில் வேண்டாம் என்று வெறுத்தவர்களும் இப்போது அந்த வற்றலை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். அது போலத் தான் முருகன் சூரனைச் செய்தான். சூரனது மனதில் இருந்த ஆணவ மலத்தை ஞானவேலா முருகன் வற்றச் செய்தான்.

மயிலாகவும் சேவலாகவும் வந்த சூரனை முறையே வாகனமாகவும் கொடியாகவும் முருகன் ஏற்றது, அவனது அளவற்ற கருணையின் அடையாளமாகும்.

முன்பே முருகனுக்குச் சேவலும் மயிலுமுண்டு. அந்த சேவலுடனும் மயிலுடனும் இப்போது சூரபத்மன் ஐக்கியமாகி முருகனுடன் என்றென்றும் இருக்கும் பெரும் பேறுபெற்றான்.

சேவல் கொடிக்கும் ஒரு தத்துவமுண்டு. இருளைச் சூரியன் விரட்டுகிறது. அந்தச் சூரியன் வருகையைக் 'கொக்கு அறு கோ' என்ற கூவி அறிவிக்கிறது. சேவல் கொக்கு என்றால் மாமரம், அறு என்றால் பிள, கோ என்றால் தலைவன் என்பது பொருள். எனவே 'கொக்கு அறுகோ' என்பது 'மாமரத்தைப் பிளந்த முருகன்' என்ற பொருள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

முருகனிடமுள்ள சேவலும் தன் தலைவன் பெயரையே கூறிக்கொண்டிருக்கிறது.

தீயவை புரிந்தாரேனும் குமரவேல் திருமுன்உ ற்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயவர் ஆகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அசமர் இந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பு இலா வரம் பெற்று உய்ந்தான்.

- கந்தபுராணம்.

முருகனுடைய ஞான வேலாயுதத்தின் பெருமை சிந்தைக்கு எட்டாதது. ஞானம் தான் முருகனின் வேல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது வெறும் ஆயுதம் அல்ல.

ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி என்று முருகனுக்கு மூன்று சக்திகள். இவற்றுள் ஞானசக்திதான் வேல்.

இச்சாசக்தி வள்ளிநாயகி, கிரியாசக்தி தெய்வ யானை. இதைப் புரிந்து கொள்ளாமல் முருகனுக்கு இரண்டு பெண்டாட்டி என்று யாரும் நினைக்கக் கூடாது.

இன்னோரு விஷயம்: முருகனுக்கு தெய்வயானையைவிட வள்ளியடம் பிரியம் அதிகம். இதற்கு காரணம், தெய்வயானையைவிட வள்ளிக்குத் தவம் அதிகம் என்பது தான்.

கிரியாசக்தியாகிய தெய்வயானை இடப்பக்கம் இருக்க வேண்டும். வள்ளி எந்தப்பக்கம் இருக்க வேண்டும்? வலப்பக்கம்.

எல்லாவற்றுக்கும் ஓர் அடையாளம் உண்டல்லவா? திருநீறிட்டால் சைவன். நாமம் தரித்தால் வைஷ்ணவன். சிலுவை அணிந்தால் கிறிஸ்தவன். இப்படி அடையாளம் இருப்பது போலவே வள்ளிக்கும் தெய்வயானைக்கும் என்ன அடையாளம்? நீலோற்பலம் என்கின்ற மலர் கையில் இருந்தால் தெய்வயானை, தாமரை கையில் இருந்தால் வள்ளி அம்மையார்.

இன்றைக்கு நூற்றுக்கு நூறு முருகன் படத்தை பாருங்கள். வள்ளி கையிலும் தெய்வயானை கையிலும் தாமரையைத்தான் வைத்து எழுதுவார்கள் ஓவியக்காரர்கள். அவர்களுக்கு படிப்பு கிடையாது. தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவலும் கிடையாது. ஏதாவது வைத்து எழதிவிட வேண்டியது. தெய்வானை கையிலே நீலோற்பலம் இருக்க வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன காரணம்? சிவனைப்போலவே முருகனுக்கு மூன்று கண்கள். வலப்பக்கம் சூரியன் இருக்கிறான். இடப்பக்கம் சந்திரன் இருக்கிறான். நெற்றி நடுவில் அக்கினி இருக்கிறான். சந்திரனை கண்டு மலர்வது நீலோற்பலம். சூரியனைக் கண்டு மலர்வது தாமரை. சுவாமிக்கு எப்பொழுதும் திறந்த கண்கள் இருபத்து நான்கு மணிநேரமும் அவரது நயனங்கள் திறந்திருக்கும் இமையா நேத்திரங்கள். சுவாமிக்குத் தூக்கம் கிடையாது. ஆகவே இருபத்து நான்கு மணி நேரமும் திறந்த விழி. அந்த இடப்பக்கமாயிருக்கிற தெய்வயானையின் கரத்தில் உள்ள நீலோற்பலம் இருபத்து நான்கு மணி நேரமும் மலர்ந்திருக்கும்.

வலது பக்கம் இருக்கிற வள்ளியம்மையார் கரத்தில் உள்ள தாமரை யிலே இருபத்துநான்கு மணிநேரமும் சூரிய ஒளிப்பட்டு இருபத்து நான்கு மணிநேரமும் மலர்ந்திருக்கும். தெய்யானை கையில் தாமரை இருந்தால் சந்திர ஒளி பட்டு இருபத்து நான்கு மணி நேரமும் தாமரை மலராது. (சந்திரனைக் கண்டு தாமரை மலராது). ஆகவே தெய்வயானைக் கையில் நீலோற்பலம் இருக்க வேண்டும்.

வள்ளி அம்மையார் கையிலே தாமரை மலர் இருக்க வேண்டும். இதன் உட்பொருள் என்ன? முருகப் பெருமானை நிஷ்காம்யமாகப் பலாபலன்கள் வேண்டாமல் வழிபடும் அடியார்கள் வாழ்வு என்றும் மலர்ந்திருக்கும். கூம்பிப் போகாது. ஒரு நாள் உயர்ந்திருக்கும். ஒரு நாள் தாழ்ந்திருக்கும் என்றில்லாமல் என்றும் ஒன்றும் போல அவர்கள் வாழ்வு சிறந்து விளங்கும். சில பேருக்குத் திடீரென்று பெயர் வரும். பிறகு வந்தது போலவே மறைந்துவிடும். அப்படி இல்லாமல் என்றைக்கும் ஒன்றுபோல் அடியார்களின் வாழ்வு சிறப்பாக இருக்கும் என்ற தத்துவத்தை விளக்குவது தான் அந்த தெய்வயானை கையில் மலர்ந்திருக்கும் நீலோற்பலமும், வள்ளியின் கையிலே இருக்கிற தாமரை மலரும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் எல்லோரும் முருகப் பெருமானை நிஷ்காம்யமாக வழிபட்டால் உங்கள் வாழ்வு மலர்ந்த வண்ணமாகவே இருக்கும்.

ஆகவே வள்ளி என்பது இச்சாசக்தி. தெய்வயானை என்பது கிரியாசக்தி, முருகன் கையிலே இருக்கிற வேல் ஞானசக்தி. இந்த மூன்று சக்திகளின் தலைவனான அந்த சுப்பிரமணி ஒரு மாமணியாக விளங்குகிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிப்பு
SCP சண்முகா கம்பியூட்டர்ஸ் & பிரின்டர்ஸ்,
தொ.பே:-024-20240,மின்னஞ்சல்:-**selshn@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org